1979 மார்ச் 9]

அவற்றை செயல்படுத்த பொருளாதாரத் திட்டங்களை வரையறை செய்தல், 10 ஆண்டு கால 1974 முதல் 1984 வரையில்- சமூகப் பொருளாதார வளர்ச்சிக்கு நீண்டகாலத் திட்டங்களைத் தீட்டுதல் ஆகிய பணிகளைச் செய்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண்கள் 299-ஐயும், 300-யும் சேர்த்து எடுத்துக் கொள்ளலாம்.

நெல், அரிசி கொள்முதல்.

*வினா எண் 299—திரு. எம். செல்வராஜ் : மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) 1977–78-ம் ஆண்டுக்காக அரசாங்கம் கொள்முதல் செய்த நெல், அரிசி எவ்வளவு?

(ஆ) அதன் மதிப்பு எவ்வளவு?

மாண்புமிகு திரு. க. உரோ.— எட்மண்ட் : (அ) 1977 குறுவை பருவத்திலும் 1978 சம்பா பருவத்திலும் 17—10—1977 முதல் 16–8–1978 வரை 3·29 இலட்சம் அரிசி டன்களுக்கு ஈடான நெல்/அரிசி கொள்முதல் மூலமும் வெளிச்சந்தையிலும் வாங்கப்பட்டுள்ளது.

(ஆ) அதன் மதிப்பு ரூ. 49 கோடியாகும்.

*வினா எண். 300—திரு. ஆ. நடராஜன் : மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) 1–6–1977-க்குப் பின் அரசு வெளிமாநிலங்களில் அரிசி கொள்முதல் செய்ததா?

(ஆ) எவ்வளவு கொள்முதல் செய்யப்பட்டது?

(இ) கோவை மாவட்டத்திற்கு அதிலிருந்து அனுப்பப்பட்ட அரிசிக்கு ரயில்வே இலாகாவுக்கு செலுத்தப்பட்ட வாடகை, அபராதத் தொகை (டெமரேஜ்) எவ்வளவு

(ஈ) அதற்கான காரணம் யாது ?

TRUTH ALONE TRIUMPHS